ஏனென்றால், உன்னபடியே அந்த ஐந்து கிராமங்களிலும் முஸ்லீம் மக்களே பெரும்பாலும் இருக்கின்றார்கள். அந்த கிராம மக்களுக்கு அங்கே போக்குவரத்துத் தடையாக இருப்பதால், பெண்கள் கொடுக்கல் வாங்கல் பாதிக்கப்படக்கூடிய நிலை அனுதாபத்திற் குரியதாக உள்ளது. ஆகவே, உடனடியாக அங்கே போக்கு வரத்துக்கு துரித நடவடிக்கை எடுப்பதோடு, இடையேயுள்ள காட்டாறுக்கு மத்தியிலே ஒரு பாலம் கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கின்ற காரணத்தால் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பாலம் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

குலசேகரன்பட்டணம் பேரூராட்சி.

141

* வினா எண் 139—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் குலசேகரன் பட்டணம் பேரூராட்சி மன்றம் இரண்டு ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் பேரூராட்சி மன்றத் தேர்வில் எந்த அடிப்படையில் தலைவர் தேர்வு நடைபெறும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம். தேர்தலுக்கு பின் நடைமுறைக்கு வரும்.

(ஆ) ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலைவர் தேர்ந்தெடுக்கப் படுவர்.

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள்.

* வினா எண் 140:—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தர மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கார்ப்ரேஷனிடமிருந்து (ஹட்கோ) உதவியினை தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா?—

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ளுவதற்காக தமிழக அரசு 500 ரூபாய் கடன் கொடுத்த தாகச் சொல்லப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்டதா? எத்தனை பேர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இதுவரையில் வீடுகளுக்குக் கடன் பட்டுவாடா ஒன்றும் செய்யப் படவில்லை.

* வினா எண் 141—திரு. சு. பாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குடிசை மாற்றுவாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகளில் குடியேறி உள்ள மக்களிடத்தில் தற்காலிகமாக குடிக்கூலி வசூல் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அவர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அதற்கு அரசு ஒப்புதல் தேவை இல்லை.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தில் கட்டப்படும் கட்டிடங்கள் முழுமையாக முடியாமல், அதாவது குடிநீர், வடிகால், இன்னும் மற்ற வேலைகள் முடிவுபெறுமல், வீடுகள் பூட்டப் பட்டிருக்கும்போது, பூட்டை உடைத்துக் கொண்டு குடியேறி இருக்கின்றார்கள். அவர்களை அகற்றுவத்ற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அப்படி நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வரும்போது, சட்ட மன்ற உறுப்பினர்கள் முழுமையாக ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு, அவர்களை வெளியேற்ற துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே இப்படிப்பட்ட வீடுகளில் குடியேறி உள்ள மக்களிடத்தில் தற்காலிகமாக குடிக் கூலி வசூல் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்.